துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.9.2025) சென்னை அரும்பாக்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விருகம்பாக்கம் கால்வாயில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூர்வாருதல், தடுப்புச் சுவரினை உயர்த்திக் கட்டுதல், சங்கிலி வேலி அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகளைத் தொடங்கி வைத்து, மேற்கொள்ளப்படவுள்ள மேம்பாட்டு பணிகள் குறித்த திட்ட வரைபடத்தினை பார்வையிட்டார். இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே. என். நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே. மோகன், ஏ.எம்.வி.பிரபாகரராஜா, துணை மேயர் மு. மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி. ஜி. வினய், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந. இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் கூ.பி. ஜெயின், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கொண்டனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.9.2025) சென்னை சைதாப்பேட்டையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின்சார்பில் 28.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சைதாப்பேட்டை அரசு மருத்துவமனை கட்டடத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, எஸ். அரவிந்த் ரமேஷ், க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, துணை மேயர் மு. மகேஷ் குமார், மண்டல குழுத் தலைவர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, ஆர்.துரைராஜ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், தேசிய நலவாழ்வுக் குழும இயக்குநர் அருண் தம்புராஜ், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் மரு.வி. வினித், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மரு. சித்ரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மறைமலைநகரில் நடைபெறும் செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி

கழக நிர்வாகிகள் - இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று கலந்தாலோசனை!

மறைமலைநகர், செப்.9-

மறைமலைநகரில் நாளை 10-ஆம் தேதி காலை நடைபெறும் செங்கல்பட்டு தொகுதியில் அடங்கிய ஒன்றிய-நகர கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்-இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுக கூட்டத்திற்கு வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரை ஆற்றுகிறார்.

செங்கல்பட்டு தொகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் -மறைமலைநகர் நகராட்சி சமுதாயக்கூடத்தில் நாளை 10-ஆம் தேதி காலை 8.00 மணியளவில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர்-தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு செங்கல்பட்டு தொகுதியில் அடங்கிய ஒன்றிய-நகர நிர்வாகிகள், வார்டு-கிளைக்கழக செயலாளர்கள்-உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஆகியோரிடம் கலந்தாலோசனை நடத்த உள்ளார்.

நாளை காலை 9.00 மணியளவில் இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுக கூட்டம் மறைமலைநகர் நகராட்சி விளையாட்டுத் திடலில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில், துணை முதல்வர் அவர்கள் கலந்து கொண்டு ஒன்றிய-நகர-வார்டு-இளைஞர் அணி நிர்வாகிகளிடம் கலந்தாலோசனை நடத்த உள்ளார்.

செங்கல்பட்டு தொகுதியில் அடங்கிய மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், வார்டு கிளைக் கழகச் செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள், ஆகியோர் கழக நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொள்ள உள்ளனர்.

செங்கல்பட்டு தொகுதியில் அடங்கிய ஒன்றிய - நகர இளைஞர் அணி அமைப்பாளர்- துணை அமைப்பாளர்கள், பாக இளைஞர் அணி அமைப்பாளர்கள், வார்டு-கிளை இளைஞர் அணி நிர்வாகி கள் ஆகியோர் இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொள்ள உள்ளனர்.

குன்றத்தூர் பேருந்து நிலையம் அருகில் அமைக்கப்பட்டுள்ள

அம்பேத்கர் திருஉருவச்சிலையை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

டி.ஆர். பாலு – தொல் திருமாவளவன் – செல்வப்பெருந்தகை – அமைச்சர் தா.மோ. அன்பரசன் பங்கேற்பு!

குன்றத்தூர், செப்.9-

குன்றத்தூர் நகராட்சி சார்பில் சார்பில் குன்றத்தூர் பேருந்து நிலையம் அருகே அமைக்கப்பட்டுள்ள அம்பேத்கர் திருஉரு வெண்கலச் சிலையை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைக்கிறார். விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளவன் கல்வெட்டை திறந்து வைக்கிறார். இவ்விழாவில் அமைச்சர் தா.மோ.அன்பரசன், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை ஆகியோர் பங்கேற்கின்றனர்.

குன்றத்தூர் நகராட்சி சார்பில், குன்றத்தூர் பேருந்து நிலையம் அருகே அமைக்கப்பட்டுள்ள அம்பேத்கர் திருவுருவ வெண்கலச் சிலை திறப்பு விழா நாளை 10-ஆம் தேதி மாலை 6.00 மணியளவில் நடைபெறுகிறது.

குன்றத்தூர் நகராட்சி தலைவர் கோ.சத்தியமூர்த்தி விழாவிற்கு தலைமை வகிக்கிறார். திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர் பாலு, திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக இளைஞர் அணி செயலாளர் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு அம்பேத்கர் திருவுருவ வெண்கலச் சிலையை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றுகிறார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளவன் இவ்விழாவில் கலந்து கொண்டு கல்வெட்டை திறந்து வைக்கி றார். அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

முடிவில், குன்றத்தூர் நகராட்சி மன்றத் துணைத் தலைவர் தே. திருநாவுக்கரசு நன்றியுரை ஆற்றுகிறார். இச் சிலை திறப்பு விழாவில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று மாவட்ட செயலாளர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

“அன்னம் தரும் அமுதகரம்” 201 வது நாள்!

வில்லிவாக்கம் மேற்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, செப்.9-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 201 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (08.09.2025), வில்லிவாக்கம் மேற்கு பகுதி: 1) வட்டம் 94 ஆ, ராஜமங்களம், வில்லிவாக்கம். 2) வட்டம் 94 சிட்கோ நகர் வில்லிவாக்கம், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அ.வெற்றி அழகன் எம். எல்.ஏ, கூ.பீ.ஜெயின், வே.வாசு, லதா வாசு.எம்.சி.டி.வி. செம்மொழி.எம்.சி. சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன்.எம்.சி வானவில் விஜய், எம். சுரேஷ் வில்லிவாக்கம் மேற்கு / கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சி.சேகர், ஆர்.தீன தயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமாசங்கர், சொ.முருகேசன், ப.லோகு பாபு, K.S.பாபு எ.வேதா, சீ.வீக்னேஷ், க.மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

ஏ.எம்.வி.பிரபாகரராஜா முன்னிலை! கலைஞர்நகர் தெற்கு பகுதி இளைஞரணி

வட்ட - பாக அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் அறிமுகம் - பாசறைக் கூட்டம்!

பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் சி.எச்.தினேஷ் அறிக்கை!

சென்னை, செப். 09 -

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் தெற்கு பகுதிக்குட்பட்ட வட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் - பாக அமைப்பாளர்கள் அறிமுகம் மற்றும் கழகக் கொள்கை விளக்க பாசறைக் கூட்டம் திராவிட இயக்கம் - நவீனத்துவத்தின் முன்னோடி என்ற தலைப்பில் இன்று (09.09.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணி அளவில், எம்.ஜி.ஆர். நகர் மார்க்கெட்டில் அமைந்துள்ள ஓம் ஸ்ரீ சேர்மன் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு கலைஞர் நகர் தெற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் சி.எச். தினேஷ்தலைமை வகிக்கிறேன்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ., முன்னிலை வகிக்கிறார்.

பகுதி துணை அமைப்பாளர்கள் ச.பிரபு, ஆர்.சரவணன், ப.பாலமுருகன், என்.எஸ். தென்னரசு, ரா.நவீன், ஆர். கே.சுந்தர் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன் எம்.சி, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் தூத்துக்குடி எஸ். ஜோயல், மாநில வர்த்தகர் அணிச் செயலாளர் காசி.முத்து மாணிக்கம், பகுதிக் கழகச் செயலாளர்கள் கே.கண்ணன் எம்.சி., மு.ராசா எம்.சி., 10 வது மண்டலக் குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, விருகம் பாக்கம் தொகுதிப் பார்வையாளர் வே.உமாகாந்த், அன்பகம் செந்தில், மாவட்டத் துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர்கள் உ.துரைராஜ், பி.எஸ்.முருகேசன் எஸ்.டி.தங்கராஜ் மற்றும் வட்டக் கழகச் செயலாளர் சோ.செந்தில்குமார், ஜம்பு. முருகன், பிகே.குமார், அ.கதிரேசன், கே.சதீஷ்கண்ணன் பூக் கடை ஆர்.பழனிச்சாமி, இராஜ்.செழியன் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்கள்.

எனவே இக்கூட்டத்தில் கலைஞர் நகர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட வட்ட அமைப்பாளர்கள், வட்ட துணை அமைப்பாளர் கள், பாக அமைப்பாளர் கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பகுதி அமைப்பாளர் சி.எச்.தினேஷ் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி டி.அசோக்குமார் நன்றி கூறுகிறார்.

திருச்செந்தூர் – திருத்தணி – மருதமலை மற்றும்

வடலூர் வள்ளலார் தெய்வ நிலையத்தில் நடைபெற்று வரும் திருப்பணிகள்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது!

சென்னை, செப்.9-

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் நேற்று (08.09.2025) ஆணையர் அலுவலகத்தில் திருச்செந்தூர், திருத்தணி, மருதமலை திருக்கோயில்கள் மற்றும் வடலூர் திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம் ஆகியவற்றில் ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவின்கீழ் (Master Plan) நடைபெற்று வரும் திருப்பணிகள் குறித்த சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.306.35 கோடி மதிப்பீட்டிலும், திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.184.07 கோடி மதிப்பீட்டிலும், மருதமலை, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.57.05 கோடி மதிப்பீட்டிலும் நடைபெற்று வரும் திருப்பணிகளில் நிறைவுற்ற பணிகள் தவிர்த்து இதர பணிகளின் முன்னேற்றம் குறித்தும், வடலூர், திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் கட்டப்பட்டு வரும் வள்ளலார் சர்வதேச மையப் பணிகள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவின்கீழ், திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.306.35 கோடி மதிப்பீட்டிலான பணிகளில் நிர்வாக அலுவலக கட்டடங்கள், அன்னதானக் கூடம், பக்தர்கள் தங்கு விடுதிகள், பக்தர்கள் வரிசைமுறை மண்டபம், முடிகாணிக்கை மண்டபம், கலையரங்கம், துணை மின்நிலையம், கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையம், சுகாதார வளாகம், சலவைக் கூடம், சஷ்டி மண்டபம், திருநீறு மற்றும் பஞ்சாமிர்தம் தயாரிக்கும் கூடம் உள்ளிட்ட பணிகள் நிறைவு பெற்றுள்ளன. சூரசம்ஹார கண்காட்சி கூடம், நாழிகிணறை மேம்படுத்தும் பணிகள், வெளிப்புற கழிவுநீர் குழாய்கள், பணியாளர் குடியிருப்பு மற்றும் வெளிப்புற மேம்பாட்டு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பில் ரூ.184.07 கோடி மதிப்பீட்டில் அன்னதானக் கூடம், மூன்றாம் பிரகார ரதவீதி விரிவாக்கம், ஐந்து அடுக்கு இராஜகோபுரம், பக்தர்கள் வரிசைமுறை மண்டபம், பிரம்ம தீர்த்தம் மேம்பாட்டு பணிகள், பணியாளர் பயிற்சி மையம் மற்றும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளும், கோவை மாவட்டம், மருதமலை, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் உபயதாரர் நிதி ரூ.1.86 கோடி மற்றும் திருக்கோயில் நிதி ரூ.55.19 கோடி என மொத்தம் ரூ.57.05 கோடி மதிப்பீட்டில் வசந்த மண்டபம், யாகசாலை, மடப்பள்ளி, பக்தர்கள் ஓய்வுக் கூடம், சுகாதார வளாகம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், கட்டணசீட்டு விற்பனை மையம், சாலை மேம்பாட்டு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், கடலூர் மாவட்டம், வடலூர், திருஅருட்பிரகாச தெய்வ நிலையத்தில் வள்ளலார் சர்வதேச மையம் அமைக்கும் பணிகளில் பிரிவு B&I ரூ.16.98 கோடி மதிப்பீட்டில் பக்தர்களுக்கான தங்கு மிடங்கள், வைத்திய சாலை, முதியோர் இல்லம், சுகாதார வளாகம் மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்கூட்டத்தின் நிறைவாக, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பேசுகையில், ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவின்கீழ் திருச்செந்தூர், திருத்தணி, மருதமலை திருக்கோயில்கள் மற்றும் வடலூர் திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் சர்வதேச மையத்தில் அமைக்கும் பணிகளில் நிறைவுற்ற பணிகளை தவிர்த்து, இதர பணிகளை வரையறுக்கப்பட்ட நாட்களுக்குள் விரைந்து முடித்து பக்தர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும். இப்பணிகளில் சம்பந்தப்பட்ட திருக்கோயில்களின் அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் தனிகவனம் செலுத்தி அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றிட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, திருமதி சி.ஹரிப்ரியா, பொ. ஜெயராமன், திருமதி கோ.செ.மங்கையர்க்கரசி, தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, சிறப்புப் பணி அலுவலர் சி.லட்சுமணன், திருச்செந்தூர் திருக்கோயில் தக்கார் ஆர்.அருள் முருகன், திருத்தணி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஸ்ரீதர், மருதமலை திருக்கோயில் தக்கார் ஜெயகுமார், கண்காணிப்பு பொறியாளர்கள் எஸ்.செல்வராஜ், எம். பழனி, கே.சச்சிதானந்தம், இணை ஆணையர்கள் எஸ். ஞானசேகரன், திருமதி கே.ரமணி, திருமதி சி. ஜோதி, பி.ரமேஷ், அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, தலைமைச் செயலகத்தில், நேற்று (08.09.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் 2023 – 2024 ஆம் ஆண்டிற்கான சிறந்த தமிழ் உச்சரிப்பு விருதுகளை முனைவர் வா. கி. சர்வோதய இராமலிங்கம், திருமதி வேதவள்ளி செகதீசன், திருமதி. ஜோ. அருணோதய சொர்ணமேரி, ப. மோகன்ராஜ் ஆகியோருக்கு பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் நத்தநல்லூர் ஊராட்சி விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு வீரர்கள் கோரிக்கைப்படி மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. கைபம்பு குழாய் அமைத்து தந்தார். உடன் ஆர் கே. தேவேந்திரன், பி.சேகர், டி.சஞ்சய் காந்தி, ஊராட்சி மன்ற தலைவர் மணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.